## ஶ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த
# ஆர்த்தி ப்ரபந்தம்

### ஆர்த்தி ப்ரபந்தம் தனியன்கள்

தேன் பயிலும் தாரான் எதிராசன் சேவடி மேல் *
தான் பரமபத்தி தலை எடுத்து * - மாந்தர்க்கு
உணவாக ஆர்த்தியுடன் ஒண்தமிழ்கள் செய்தான் *
மணவாள மாமுனிவன் வந்து

வம்பவிழ் தார் வண்மை மணவாள மாமுனிவன் *
அம்புவியில் கால் பொருந்தா ஆர்த்தியினால் * - உம்பர் தொழும்
விண்ணுலகில் செல்ல விரைந்து எதிராசன் பதங்கள் *
நண்ணி உரைத்தார் நமக்கு

## ஶ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த
# ஆர்த்தி ப்ரபந்தம்

வாழி எதிராசன் வாழி எதிராசன் *
வாழி எதிராசன் என வாழ்த்துவார் * - வாழி என
வாழ்த்துவார் வாழி என வாழ்த்துவார் * தாளிணையில்
தாழ்த்துவார் விண்ணோர் தலை 1

இராமானுசாய நம என்று சிந்தித்து *
இராமானுசரோடு இறைப் போழ்து * - இராமாறு
சிந்திப்பார் தாளிணையில் சேர்ந்திருப்பார் * தாளிணையை
வந்திப்பார் விண்ணோர்கள் வாழ்வு 2

தந்தை நற்றாய் தாரம் தனயர் பெரும் செல்வம் *
என்தனக்கு நீயே எதிராசா! * - இந்த நிலைக்கு
ஏலாத இவ்வுடலை இன்றே அறுத்தருளப் *
பாராததென்னோ பகர்? 3

இந்த உடல் சிறை விட்டு எப்பொழுது யான் ஏகி *
அந்தமில் பேரின்பத்துள் ஆகுவேன் * - அந்தோ!
இரங்காய் எதிராசா! என்னை இனி உய்க்கை *
பரங்காண் உனக்கு உணர்ந்து பார் 4

தன் புதல்வான் கூடாமல் தான் புசிக்கும் போகத்தால் *
இன்புறுமோ? தந்தை எதிராசா! * - உன் புதல்வன்

அன்றோ உரையாய் யான் ஆதலால் * உன் போகம்
நன்றோ எனை ஒழிந்த நாள்? 5

வேம்பு முற்றக் கைப்பு மிகுவது போல் * வெவ்வினையேன்
தீம்பு முற்றும் தேகமுற்றிச் செல்லுங்கால் * - ஆம்பரிசால்
ஏற்கவே சிந்தித்து எதிராசா? * இவ்வுடலைத்
தீர்க்கவே ஆன வழி செய் 6

அன்னை குடிநீர் அருந்தி * முலையுண் குழவி
தன்னுடைய நோயைத் தவிராளோ? - என்னே!
எனக்கா எதிராசா! எல்லாம் நீ செய்தால் *
உனக்கது தாழ்வோ உரை? 7

தன் குழவி வான்கிணற்றைச் சார்ந்திருக்கக் கண்டிருந்தாள் *
என்பதன்றோ அன்னை பழி ஏற்கின்றாள் * - நன்குணரில்
என்னாலே என்னாகுமேலும் எதிராசா! *
உன்னாலேயாமுறவையோர் 8

கூபத்தில் வீழும் குழவியுடன் குதித்து * அவ்
வாபத்தை நீக்கும் அந்த அன்னை போல் * - பாபத்தால்
யான் பிறப்பேனேலும் இனி எந்தை எதிராசன் *
தான் பிறக்கும் என்னை உய்ப்பதா 9

பூமகள் கோன் தென்னரங்கர் பூங்கழற்குப் பாதுகமாய்த் *
தாம் மகிழும் செல்வச் சடகோபர் * - தேமலர்த் தாட்கு
உய்ந்தினிய பாதுகமாம் எந்தை இராமானுசனை *
வாய்ந்தெனது நெஞ்சமே! வாழ் 10

உன்னை ஒழிய ஒரு தெய்வம் மற்றறியா *
மன்னு புகழ் சேர் வடுகநம்பி * - தன் நிலையை
என்தனக்கு நீ தந்து எதிராசா! * எந்நாளும்
உன்தனக்கே ஆட்கொள் உகந்து 11

தேசம் திகழும் திருவாய்மொழிப்பிள்ளை *
மாசில் திருமலையாழ்வார் * என்னை - நேசத்தால்
எப்படியே எண்ணி நின்பால் சேர்த்தார் எதிராசா! *
அப்படியே நீ செய்தருள் 12

எதிராசன் வாழி எதிராசன் வாழி *
எதிராசன் வாழி என்றேத்திச் * - சதிராக
வாழ்வார்கள் தாளிணைக் கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவர் *
ஆழ்வார்கள் தங்கள் அருள் 13

அதிகாரம் உண்டேல் அரங்கர் இரங்காரோ *
அதிகாரம் இல்லாதார்க்கன்றோ - எதிராசா!
நீ இரங்க வேண்டுவது * நீயும் அதிகாரிகளுக்
கே இரங்கில் * என் செய்வோம் யாம்? 14

எம்பெருமானார் திருவடிகளே சரணம் *
என்பதுவே நா உரைக்கும் இத்தால் என்? * - அன்பவர் பால்
இப்போதளவும் யான் ஒன்றும் காண்கின்றிலேன் *
எப்போது உண்டாவது இனி? 15

ஆகாததீதென்று அறிந்தும் பிறர்க்கு உரைத்தும் *
ஆகாததே செய்வன் ஆதலால் * - மோகாந்தன்
என்று நினைத்து என்னை இகழேல் எதிராசா! *
என்று உன்னடி சேர்வன் யான்? 16

பொல்லாங்கனைத்தும் பொதிந்து கொண்டு * நன்மையில் ஒன்று
இல்லா எனக்கும் எதிராசா! * - நல்லார்கள்
நண்ணும் திருநாட்டை நான் தருவன் என்று நீ *
தண்ணென்றிருக்கிறது என் தான்? 17

என்று விடுவது எனக்கு எந்தாய் எதிராசா! *
ஒன்றும் அறிகின்றிலேன் உரையாய் * - குன்றாமல்
இப்படியே இந்த உயிர்க்கு என்றும் இருளே விளைவிக்கும் *
இப்பவமாம் நீண்ட இரவு 18

அல்லும் பகலும் யான் ஆக்கை வழி உழன்று *
செல்லுமது உன் தேசுக்குத் தீங்கன்றோ? * - நல்லார்கள்
தம் தனயர் நீசர்க்கு ஆட்செய்யச் சகிப்பரோ? *
எந்தை எதிராசா! இசை 19

போம் வழியைத் தரும் என்னும் இன்பம் எல்லாம்
புசித்து வழி போய் அமுத விரசை ஆற்றில் *
நாம் மூழ்கி மலமற்றுத் தெளிவிசும்பை
நண்ணி நலம் திகழ் மேனி தன்னைப் பெற்றுத் *
தாம் அமரர் வந்தெதிர் கொண்டு அலங்கரித்துச்
சற்கரிப்ப மாமணி மண்டபத்துச் சென்று *
மாமலராள் கோன் மடியில் வைத்துகக்கும்
வாழ்வு * நமக்கு எதிராசன் அருளும் வாழ்வே 20

திருமலையாழ்வார் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால் *
தருமதி கொண்டவர் தம்மை உத்தாரகராக எண்ணி
இரு மனமே * அவர்க்காய் எதிராசர் எம்மைக் கடுக
பரமபதம் தன்னில் ஏற்றுவர் * என்ன பயம் நமக்கே? 21

தீதற்ற ஞானத் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால் *
ஏதத்தை மாற்றும் எதிராசர் தம் அபிமானம் என்னும் *
போதத்தை ஏறிப் பவமாம் புணரிதனைக் கடந்து *
கோதற்ற மாதவன் பாதக் கரையைக் குறுகுவனே 22

அடியார்கள் குழாங்கள் அழகோலக்கம் இருக்க
ஆனந்த மயமான மாமணி மண்டபத்து *
படியாதுமில் படுக்கையாய் இருக்கும் அனந்தன்
பணமணிகள் தம்மின் ஒளி மண்டலத்தின் இடையில் *
வடிவாரும் மாமலராள் வலவருகும் மற்றை
மண்மகளும் ஆய்மகளும் இடவருகும் இருக்க *
நடுவாக வீற்றிருக்கும் நாரணனைக் கடுக
நான் அனுபவிக்கும் வகை நல்கு என் எதிராசா! 23

இந்த உடல் விட்டு இரவி மண்டலத்தூடு ஏகி
இவ்வண்டம் கழித்து இடையில் ஆவரணம் ஏழ் போய் *
அந்தமில் பாழ் கடந்து அழகார் விரசை தனில் குளித்து அங்கு
அமானவனால் ஒளி கொண்ட சோதியும் பெற்று * அமரர்
வந்தெதிர் கொண்டு அலங்கரித்து வாழ்த்தி வழி நடத்த
வைகுந்தம் புக்கு மணி மண்டபத்துச் சென்று *
நம் திருமால் அடியார்கள் குழாங்களுடன் கூடும்
நாள் எனக்குக் குருகும் வகை நல்கு என் எதிராசா! 24

என்று நிரேதுகமாக என்னை அபிமானித்து
யானும் அறிந்து உனக்கேயாய் இருக்கும் வகை செய்தாய் *
அன்று முதல் இன்றளவும் அனவரதம் பிழையே
அடுத்தடுத்துச் செய்வது அனுதவிப்பது இனிச் செய்யேன் *
என்றுன்னை வந்து இரப்பதாம் என் கொடுமை கண்டும்
இகழாதே இரவு பகல் அடிமை கொண்டு போந்தாய் *
இன்று திருநாடும் எனக்கருள எண்ணுகின்றாய்
இனிக் கடுகச் செய்தருள வேண்டும் எதிராசா! 25

தென்னரங்கர் தமக்காமோ? தேவியர்கட்காமோ?
சேனையர்கோன் முதலான சூரியர்கட்காமோ? *
மன்னிய சீர் மாறன் அருள்மாரி தனக்காமோ?
மற்றுமுள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ? *
என்னுடைய பிழை பொறுக்க யாவருக்கு முடியும்?
எதிராசா! உனக்கன்றி யான் ஒருவர்க்கு ஆகேன் *
உன் அருளால் எனக்கு ருசி தன்னையும் உண்டாக்கி
ஒளி விசும்பில் அடியேனை ஒருப்படுத்து விரைந்தே 26

இவ்வுலகில் இனி ஒன்றும் எண்ணாதே நெஞ்சே!
இரவு பகல் எதிராசர் எமக்கு இனிமேல் அருளும் *

அவ்வுலகை அலர்மகள் கோன் அங்கிருக்கும் இருப்பை
அடியார் குழாங்கள் தமை அவர்கள் அனுபவத்தை *
இவ்வுயிரும் அதுக்கிட்டுப் பிறந்து இழந்து கிடந்தது
என்னும் அத்தை என்றும் அதுக்கிடைச் சுவராய்க் கிடக்கும் *
வெவ்வினையால் வந்த உடல் விடும் பொழுதை விட்டால்
விளையும் இன்பம் தன்னை முற்றும் விடாமல் இருந்தெண்ணே 27

பண்டு பல ஆரியரும் பாருலகோர் உய்யப்
பரிவுடனே செய்தருளும் பல்கலைகள் தம்மைக் *
கண்டதெல்லாம் எழுதி அவை கற்றிருந்தும் பிறர்க்குக்
காதலுடன் கற்பித்தும் காலத்தை கழித்தேன் *
புண்டரீகை கேள்வன் உறை பொன்னுலகு தன்னில்
போக நினைவொன்றும் இன்றிப் பொருந்தி இங்கே இருந்தேன் *
எண்டிசையும் ஏத்தும் எதிராசன் அருளாலே
எழில் விசும்பை அன்றி இப்போது என் மனம் எண்ணாதே 28

சாறுவாக மதம் நீறு செய்து சமணச் செடிக்கனல் கொளுத்தியே
சாக்கியக் கடலை வற்றுவித்து மிகு சாங்கியக்கிரி முறிந்திட *
மாறு செய்திடுகணாத வாதியர்கள் வாய் தகர்த்தற மிகுத்து மேல்
வந்த பாசுபதர் சிந்தியோடும் வகை வாது செய்த எதிராசனார் *
கூறுமாகுரு மதத்தொடோங்கிய குமாரிலன் மதம் அவற்றின் மேல்
கொடிய தர்க்க சரம் விட்ட பின் குறுகிய மாய வாதியரை வென்றிட *
மீறி வாதில் வரும் பாற்கரன் மத விலக்கடிக் கொடி எறிந்து போய்
மிக்க யாதவ மதத்தை மாய்த்த பெருவீரர் நாளும் மிக வாழியே 29

சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
திருவரையில் சாத்திய செந்துவராடை வாழி *
ஏராரும் செய்ய வடிவு எப்பொழுதும் வாழி
இலங்கிய முந்நூல் வாழி இணைத்தோள்கள் வாழி *
சோராத துய்ய செய்ய முகச் சோதி வாழி
தூமுறுவல் வாழி துணமலர்க் கண்கள் வாழி *
ஈராரும் திருநாமம் அணிந்த எழில் வாழி
இனிதிருப்போடு எழில் ஞான முத்திரை வாழியே 30

அறுசமயச் செடி அதனை அடி அறுத்தான் வாழியே
அடர்ந்து வரும் குதிருட்டிகளை அறத்துறந்தான் வாழியே *
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்து விட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வமுற்றும் திருத்தி வைத்தான் வாழியே *
மறை அதனில் பொருள் அனைத்தும் வாய் மொழிந்தான் வாழியே
மாறன் உரை செய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே *
அறமிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே 31

சங்கர பாற்கர யாதவ பாட்டப் பிரபாகரர் தங்கள் மதம்
சாய்வுற வாதியர் மாய்குவர் என்று சதுமறை வாழ்ந்திடு நாள் *
வெங்கலி இங்கினி வீறு நமக்கிலை என்று மிகத் தளர் நாள்
மேதினி நஞ்சுமை ஆறும் எனத் துயர் விட்டு விளங்கிய நாள் *
மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றும் உவந்திடு நாள் *
செங்கயல் வாவிகள் சூழ் வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்
சீமான் இளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே 32

இன்னம் எத்தனை காலம் இந்த உடம்புடன் யான் இருப்பன்?
இன்னபொழுது உடம்பு விடும் இன்னபடி அது தான் *
இன்னவிடத்தே அதுவும் என்னும் இவை எல்லாம்
எதிராசா! நீ அறிதி யான் இவை ஒன்றறியேன் *
என்னை இனி இவ்வுடம்பை விடுவித்து உன் அருளால்
ஏராரும் வைகுந்தத்தேற்ற நினைவு உண்டேல் *
பின்னை விரையாமல் மறந்திருக்கிறது என்? பேசாய்
பேதைமை தீர்த்து என்னை அடிமை கொண்ட பெருமானே! 33

முன்னை வினை பின்னை வினை பிராரத்தம் என்னும்
மூன்று வகையான வினைத் தொகை அனைத்தும் * யானே
என்னை அடைந்தோர் தமக்குக் கழிப்பன் எனும் அரங்கர்
எதிராசா! நீ இட்ட வழக்கன்றோ? சொல்லாய் *
உன்னை அல்லதறியாத யான் இந்த உடம்போடு
உழன்று வினைப் பயன் புசிக்க வேண்டுவது ஒன்றுண்டோ? *
என்னுடைய இருவினையை இறைப்பொழுதில் மாற்றி
ஏராரும் வைகுந்தத்து ஏற்றி விடாய் நீயே 34

அருளாலே அடியேனை அபிமானித்து அருளி
அனவரதம் அடிமை கொள்ள நினைத்து நீ இருக்க *
மருளாலே புலன் போக வாஞ்சை செய்யும் என்தன்
வல்வினையை மற்றி உன் பால் மனம் வைக்கப் பண்ணாய் *
தெருளாரும் கூரத்தாழ்வானும் அவர் செல்வத்
திருமகனார் தாமும் அருளிச் செய்த * தீமைத்
திரளான அத்தனையும் சேர உள்ள என்னைத்
திருத்தி உய்யக் கொள்ளும் வகை தேரும் எதிராசா! 35

வாசனையில் ஊற்றமோ மாளாத வல்வினையோ? *
ஏதென்றறியேன் எதிராசா! * - தீதாகும்
ஐம்புலனில் ஆசை அடியேன் மனம் தன்னை *
வன்புடனே தான் அடரும் வந்து 36

இன்றளவும் இல்லா அதிகாரம் * மேலும் எனக்கு
என்றுளதாம் சொல்லாய் எதிராசா! * - குன்றா

வினைத் தொடரை வெட்டி விட்டு * மேலை வைகுந்தத்து
எனைக் கடுக ஏற்றாததென்? 37

அஞ்சில் அறியாதார் ஐம்பதிலும் தாம் அறியார் *
என் சொல் எனக்கோ எதிராசா? * - நெஞ்சம்
உன தாள் ஒழிந்தவற்றையே உகக்க * இன்றும்
அனுதாபம் அற்றிருக்கையால் 38

வேம்பு கறியாக விரும்பினார் கைத்ததென்று *
தாம் புகடாதே புசிக்கும் தன்மை போல் * - தீம்பன் இவன்
என்று நினைத்து என்னை இகழார் எதிராசர் *
அன்று அறிந்து அங்கீகரிக்கையால் 39

அவத்தே பொழுதை அடியேன் கழித்துப் *
பவத்தே இருக்குமது பண்போ? - திவத்தே யான் *
சேரும் வகை அருளாய் சீரார் எதிராசா! *
போரும் இனி இவ்வுடம்பைப் போக்கு 40

எனைப் போல் பிழை செய்வார் இவ்வுலகில் உண்டோ? *
உனைப் போல் பொறுக்க வல்லாரும் உண்டோ? * - அனைத்துலகும்
வாழப் பிறந்த எதிராச மாமுனிவா! *
ஏழைக்கு இரங்காய் இனி 41

ஐம்புலன்கள் மேலிட்டு அடரும் பொழுது அடியேன் *
உன் பதங்கள் தம்மை நினைந்து ஓலமிட்டால் * - பின்பவை தாம்
என்னை அடராமல் இரங்காய் எதிராசா! *
உன்னை அல்லால் எனக்குண்டோ? 42

இந்த உலகில் பொருந்தாமை ஏதும் இல்லை *
அந்த உலகில் போக ஆசை இல்லை * - இந்த நமக்கு
எப்படியோ தான் தருவர் எந்தை எதிராசா! *
ஒப்பில் திருநாடு உகந்து? 43

மாகாந்த நாரணனார் வைகும் வகை அறிந்தோர்க்கு *
ஏகாந்தம் இல்லை இருள் இல்லை * - மோகாந்தர்
இவ்விடம் ஏகாந்தம் இருள் என்று பயம் அற்று இருந்து *
செய்வர்கள் தாம் பாவத் திறம் 44

நாராயணன் திருமால் நாரம் நாம் என்னும் முறை *
ஆராயில் நெஞ்சே! அநாதி அன்றோ? * - சீராரும்
ஆசாரியனாலே அன்றோ? நாம் உய்ந்ததென்று *
கூசாமல் எப்பொழுதும் கூறு 45

திருவாய்மொழிப்பிள்ளை தீவினையோம் தம்மைக் *
குருவாகி வந்து உய்யக் கொண்டு * - பொருவில்
மதி தான் அளித்தருளும் வாழ்வன்றோ நெஞ்சே! *
எதிராசர்க்கு ஆளானோம் யாம் 46

இராமானுசாய நம என்று இரவும் பகலும் சிந்தித்து *
இராமானுசர்கள் இருப்பிடம் தன்னில் இறைப் பொழுதும் *
இராமானுசர் அவர்க்கெல்லா அடிமையும் செய்ய எண்ணி *
இராமானுசர் தம்மை மானுசரா என் கொல் எண்ணுவதே! 47

எண்ணாது என் நெஞ்சம் இசையாது என் நா இறைஞ்சாது சென்னி *
கண்ணானவை ஒன்றும் காணலுறா * கலியார் நலிய
ஒண்ணாத வண்ணம் உலகளித்தோன் எதிராசன் அடி
நண்ணாதவரை * அரங்கேசர் செய்த நலம் நமக்கே 48

நந்தா நரகத்து அழுந்தாமை வேண்டிடில் நானிலத்தீர்! *
எந்தாதை ஆன எதிராசனை நண்ணும் * என்றும் அவன்
அந்தாதி தன்னை அனுசந்தியும் அவன் தொண்டருடன் *
சிந்தா குலம் கெடச் சேர்ந்திரும் முத்தி பின் சித்திக்குமே 49

அவத்தே அருமந்த காலத்தைப் போக்கி * அறிவின்மையால் இப்
பவத்தே உழல்கின்ற பாவியர்காள் * பல காலம் நின்று
தவத்தே முயல்பவர் தங்கட்கும் எய்த ஒண்ணாத * அந்தத்
திவத்தே உமை வைக்கும் சிந்தியும் நீர் எதிராசன் என்றே 50

என்றுளன் ஈசனும் உயிரும் அன்றே உண்டிக் காலம் எல்லாம் *
இன்றளவாகப் பழுதே கழிந்து இருவினையால் *
என்று இழவின்றி இருக்கும் என் நெஞ்சம் இரவு பகல்
நின்று தபிக்கும் * எதிராசா! நீ அருள் செய்த பின்னே 51

கனக கிரி மேல் கரிய முகில் போல் *
வினதை சிறுவன் மேற்கொண்டு * - தனு விடும் போது
ஏரார் அரங்கர் எதிராசர்க்கா * என் பால்
வாரா முன் நிற்பர் மகிழ்ந்து 52

இதத்தாலே தென்னரங்கர் செய்கின்றது என்றறிந்தே
        இருந்தாலும் தற்கால வேதனையின் கனத்தால் *
பதைத்தாலோ என்னும் இந்தப் பாவ உடம்புடனே
        பல நோவும் அனுபவித்து இப்பவத்து இருக்கப் போமோ? *
மதத்தாலே வல்வினையின் வழி உழன்று திரிந்த
        வல்வினையேன் தன்னை உனக்காளாக்கிக் கொண்ட *
இதத்தாயும் தந்தையுமாம் எதிராசா! என்னை
        இனிக் கடுக இப்பவத்தினின்றும் எடுத்தருளே 53

இன்னம் எத்தனை நாள் இவ்வுடம்புடன்
　இருந்து நோவு படக் கடவேனையோ! *
என்னை இதினின்றும் விடுவித்து நீர்
　என்று தான் திருநாட்டினுளே ஏற்றுவீர்? *
அன்னையும் அத்தனும் அல்லாத சுற்றமும்
　ஆகி என்னை அளித்தருள் நாதனே! *
என் இதத்தை இராப் பகல் இன்றியே
　ஏகமெண்ணும் எதிராச வள்ளலே! 54

தென்னரங்கர் சீர் அருளுக்கு இலக்காகப் பெற்றோம்
　திருவரங்கம் திருப்பதியே இருப்பாகப் பெற்றோம் *
மன்னிய சீர் மாறன் கலை உணவாகப் பெற்றோம்
　மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம் *
முன்னவராம் நம் குரவர் மொழிகள் உள்ளப் பெற்றோம்
　முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம் *
பின்னை ஒன்று தனில் நெஞ்சு பேராமல் பெற்றோம்
　பிறர் மினுக்கம் பொறாமை இல்லாப் பெருமையும் பெற்றோமே 55

உன்தன் அபிமானமே உத்தாரகம் என்று *
சிந்தை தெளிந்திருக்கச் செய்த நீ * - அந்தோ!
எதிராசா! நோய்களால் என்னை நலக்காமல் *
சதிராக நின் திருத்தாள் தா 56

தேசிகர்கள் போற்றும் திருவாய்மொழிப்பிள்ளை *
வாசமலர்த் தாள் அடைந்த வத்துவெனும் * - நேசத்தால்
என் பிழைகள் காணா எதிராசரே! * அடியேன்
புன் பகர்வைக் கேளும் பொறுத்து 57

எந்தை திருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால் *
உன்தன் உறவை உணர்ந்த பின் * - இந்த உயிர்க்கு
எல்லா உறவும் நீ என்றே எதிராசா! *
நில்லாததுண்டோ என் நெஞ்சு? 58

எந்தை திருவரங்கர் ஏரார் கருடன் மேல் *
வந்து முகம் காட்டி வழி நடத்த * - சிந்தை செய்து இப்
பொல்லா உடம்பு தனைப் போக்குவது எந்நாள் கொலோ? *
சொல்லாய் எதிராசா! சூழ்ந்து 59

இந்த அரங்கத்து இனிதிரு நீ என்று அரங்கர் *
எந்தை எதிராசர்க்கு ஈந்த வரம் * - சிந்தை செய்யில்
நம்மதன்றோ நெஞ்சமே! நற்றாதை சொம்புதல்வர்
தம்மதன்றோ தாயமுறை தான் 60

**அடிவரவு:** வாழி இராமானுசாய தந்தை இந்தவுடல் தன்புதல்வன்
வேம்புமுற்ற அன்னைகுடி தன்குழவி கூபத்தில் பூமகள் உன்னை தேச
எதிராசன் அதிகாரம் எம்பெருமானார் ஆகாத பொல்லாங்கு என்று அல்லும்
போம்வழி திருமலை தீதற்ற அடியார்கள் இந்த என்றுநிரேதுகம்
தென்னரங்கர் இவ்வுலகில் பண்டுபல சாறுவாக சீராரும் அறுசமயம்
சங்கர இன்ன முன்னைவினை அருளாலே வாதனையில் இன்றளவும் அஞ்சில்
வேம்புகறி அவத்தே எனைப்போல் ஐம்புலன் இந்தவுலகு மாகாந்த
நாராயணன் திருவாய் இராமானுச எண்ணாதென் நந்தா அவத்தே என்றுளன்
கனககிரி இதத்தாலே இன்னுமெத்தனை தென்னரங்கர் உன்தன்
தேசிகர்கள் எந்தைதிருவாய் எந்தை இந்தவரங்கத்து

**ஆர்த்தி ப்ரபந்தம் ஸம்பூர்ணம்**